Registered as a Newspaper
பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 67

வியாழக்கிழமை
01 பெப்ரவரி 2024

தை 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"அன்று வந்ததும் இதே நிலா
இன்று வந்ததும் அதே நிலா
என்றும் உள்ளது ஒரே நிலா
இருவர் கண்ணுக்கும் ஒரே நிலா"

# சட்டரீதியற்ற அறிவிப்பே குழப்பத்துக்குக் காரணம்!

## தமிழரசுக் கட்சித் தலைவர் சிறீதரனுக்கு சுமந்திரன் எம்.பி. கடிதம்



**யாழ்ப்பாணம், பெப்ரவரி 1**

**தவறான ஆலோசனைகளின் பேரிலும், கலந்துரையாடல் இன்றியும், அதிகாரமற்றதும் சட்டத்துக்கு முரணான வகையில் விடுக்கப்பட்ட அறிவிப்பாலும் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. கட்சியின் சட்டரீதியான தலைவரான நீங்கள் காலம் தாழ்த்தாது ஒத்திவைக்கப்பட்ட பொதுநிகழ்வை நடத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.**

11

## சுதந்திரதின நிகழ்வு; அச்சுறுத்தல் இல்லை

### பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு



கொழும்பு, பெப்.1

சுதந்திர தினத்துக்குத் தேவையான அனைத்துப் பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. எவ்விதமான பாதுகாப்பு அச்சுறுத்தல்களும் இல்லை என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்தார்.

நாட்டில் கொலைகள், துப்பாக்கிச் சூடுகள் அதிகரித்திருக்கும் நிலையில், சுதந்திரதின நிகழ்வில் முக்கியமான பிரமுகர்கள் கலந்துகொள்கின்றனர். அவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா?

11

## இலங்கையின் சுதந்திரதினம் தமிழர்களுக்குக் கறுப்புநாள்!

### பேரணிக்கு அழைக்கின்றது யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம், பெப்.1

இலங்கையின் சுதந்திரதின நாளை கறுப்பு நாளாகப் பிரகடனப்படுத்துவதுடன், அன்று பேரணி ஒன்றும் முன்னெடுக்கப்படும் என்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 4ஆம் திகதி கிளிநொச்சி, இரணைமடுச் சந்தியில் இருந்து டிப்போ சந்தி வரையில் நடத்தப்படவுள்ள பேரணியில் அனைவரும் கலந்துகொள்ள

11

## கடவுச்சீட்டு கட்டணம் அதிகரிப்பு

கொழும்பு, பெப்.1

கடவுச்சீட்டுக்கான சாதாரண சேவைக் கட்டணம் இன்று முதல் நடைமுறைக்குவரும் வகையில் 100 வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது.

குடிவரவுத்திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இதுவரை 5 ஆயிரம்ரூபாவாக இருந்த கட்டணம், 10 ஆயிரம் ரூபாவாக

11

## சுகாதாரத்துறையினர் பணிப்புறக்கணிப்பு!

கொழும்பு, பெப்.1

சுகாதாரத்துறை தொழிற்சங்கங்கள் இன்று நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நடத்தவுள்ளன. இன்று காலை 6.30 மணிக்கு ஆரம்பிக்கும் வேலை நிறுத்த போராட்டத்தில் 72 தொழிற்சங்கங்கள் பங்கேற்கவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

மருத்துவர்களுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள 35 ஆயிரம் ரூபா கொடுப்பனவைத் தங்களுக்கும் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியே இந்தப்

11



## போதைமாத்திரைகளுடன் யாழில் இளைஞன் கைது!

யாழ்ப்பாணம், பெப்.1

போதை மாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். 26 வயதான சந்தேகநபரிடம் இருந்து 2 ஆயிரத்துக்கும் அதிகமான போதை மாத்திரைகள் கைப்பற்றப்

11

## உயிரைப் பலியெடுத்தது போதைப் பழக்கம்

யாழ்ப்பாணம், பெப்.1

இரவு நித்திரைக்குச் சென்ற இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் இருபாலையில் நடந்துள்ளது.

11



## குமுதினி படகு மீண்டும் சேவையில்

யாழ்ப்பாணம், பெப்.1

குமுதினிப் படகு இன்று முதல் சேவையில் ஈடுபடும் என்று வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் குறூஸ் தெரிவித்தார்.

11

## விபத்தில் சிக்கியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப்.1

விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்றுவந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

11



## எரிபொருள் விலைகளில் நள்ளிரவுமுதல் மாற்றம்!

கொழும்பு, பெப்.1

நேற்று நள்ளிரவு முதல் நடைமுறையாகும் வகையில் இலங்கை கனிய வள கூட்டுத்தாபனத்தின் எரிபொருள்களின் விலையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. ஒக்ரேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியக்கொடி அவமதிப்பு கண்காணிக்க தனிக்குழு



தேசியக் கொடியை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார். சுதந்திரதினத்தை முன்னிட்டு கொழும்பு காலிமுகத்திடல் வீதி முழுமையாக மூடப்படவுள்ளது. அத்துடன் தேசியக் கொடியை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவோருக்கு எதிராகக் கண்காணிப்பதற்கு தனிக்குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது என்றும் தேசபந்து தென்னக்கோன் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

# மீற்றர் இன்றி விதிமீறும் யாழ். நகர ஓட்டோக்கள்

## மக்கள் விசனம்

**கொழும்பு, பெப். 1**

**யாழ். நகரில் சேவையில் ஈடுபடும் பல முச்சக்கர வண்டிகள் மீற்றர் பொருத்தாது பயணிகளிடம் அதிக கட்டணங்களை வசூலிக்கின்றன என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் கடந்த செப்ரெம்பரில் நடைபெற்ற கூட்டத்தில் 'மீற்றர் கட்டாயம்' என உத்தரவு பிறப்பிக்கப்பட்ட போதும் பல முச்சக்கரவண்டிகள் அதனை நடைமுறைப்படுத்தவில்லை.

யாழ். போதனா மருத்துவமனை, புகையிரத நிலையம் உள்ளிட்டவற்றுக்கு முன்பாகத் தரித்து நின்று சேவையில் ஈடுபடும் பல முச்சக்கர வண்டிகளே இந்த விதிமீறல்களில் ஈடுபடுகின்றன.

பொருளாதார நெருக்கடியின் மத்தியில் பலவித இன்னல்களை எதிர்நோக்கும் மக்கள் அத்தியாவசிய சேவைகளுக்கான பயணங்களுக்கும் அதிக பணத்தைச் செலவழிக்க நேரிடுகிறது.

எனவே, உரிய அதிகாரிகள் இந்தச் செயற்பாட்டைத் தடுப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-555)

# புதிய திருத்தங்களுடன் 'அஸ்வெசும' நலன்புரி

கொழும்பு, பெப். 1

பல்வேறு புதிய திருத்தங்களுடன் 'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தைத் தொடர்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

'அஸ்வெசும' நலன்புரித் திட்டப் பயனாளிகளில் பாதிக்கப்படக்கூடியவர்களின் செல்லுபடியாகும் காலத்தை எதிர்வரும் ஏப்ரல் முதல் டிசெம்பர் மாதம் வரை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியால் தற்காலிகமாக வருமானத்தை இழந்த பயனாளிகளின் செல்லுபடியாகும் காலத்தை இம்மாதம் முதலாம் திகதி முதல் டிசெம்பர் வரை நீடிப்பதற்கும் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் தற்போது நெருக்கடிக்குள்ளாகியுள்ள மற்றும் தற்காலிகமாக வருமானத்தை இழந்த தரப்பினரை ஒன்றிணைத்து 8 இலட்சம் குடும்பங்களுக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிவரை செல்லுபடியாகும் வகையில் 5ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும்.

அதேவேளை அஸ்வெசும இரண்டாம் கட்டக் கொடுப்பனவுகளை ஜூலை மாதம் முதல் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# தனிநபர்களுக்கும் இனிமேல் முத்திரை




யாழ்ப்பாணம், பெப். 1

இலங்கை அஞ்சல் திணைக்களத்தால் தனிநபர் முத்திரைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு தனிநபரும், தன் வாழ்வின் திருமணநாள் உள்ளிட்ட பல நினைவுகளை மீட்கும் விதமாக முத்திரைகளை அச்சிட முடியும்.

இவ்வாறு அச்சிடப்படும் முத்திரைகள் நாடளாவிய ரீதியிலான அஞ்சல் சேவைக்குப் பயன்படுத்த முடியும். 25 ரூபா பெறுமதியான 20 முத்திரைத் தாள்களுக்கான கட்டணமாக 2 ஆயிரம் ரூபாவைச் செலுத்தி அந்தத் தாளைப் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களைப் பெறுவதற்காக 0212222708 என்ற பிராந்திய அஞ்சல் அத்தியட்சகரின் சந்தைப்படுத்தல் காரியாலயத்துக்குத் தொடர்பை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (ம-125)

# திடீர் மழையால் அறுவடை பாதிப்பு

யாழ்ப்பாணம், பெப். 1

யாழ். குடாநாட்டில் நேற்றுத் திடீரென பெய்த மழையால் பெரும்போக அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அறுவடைக்குத் தயார் நிலையில் காணப்பட்ட நெல் வயல்களில் நேற்று முன்னெடுக்கப்பட்ட அறுவடைப் பணிகள் திடீரென கொட்டித் தீர்த்த மழையால் இடைநடுவில் நிறுத்தப்பட்டன.

அத்துடன், அறுவடைசெய்யப்பட்ட நெல்லும் மழையில் நனைந்து பாதிக்கப்பட்டுள்ளது என்றும் விவசாயிகள் தெரிவித்தனர். (ச-17)

# வழக்குப் பொருள்கள் அழிவு மாற்று ஏற்பாடாக ஏலத்தில்

## அரசாங்கம் நடவடிக்கை

கொழும்பு, பெப். 1

உரிமையாளர்களால் விடுவிக்க முடியாத பொருள்களை ஏலத்தில் விற்பனை செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஏலத்தினூடாகப் பெறப்படும் பணம், குறித்த வழக்குடன் தொடர்புடைய கணக்கில் வைப்புச் செய்யப்பட்டு வழக்கு நிறைவடைந்தவுடன் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

அதன்படி குறித்த வழக்குப் பொருளுக்குரிய நபர் வழக்கில் வெற்றி பெற்றால் அந்தப் பணம் குறித்த நபருக்கு வழங்கப்படும். தோல்வியுற்றால் அதனை அரசுடைமையாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வழக்கு விசாரணைகள் முடிவடைய நீண்டகாலம் எடுப்பதனால் பெரும்பாலான வழக்குப் பொருள்கள் அழிவடைவதை கருத்திற்கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ச)

# கருங்கல் ஏற்றுமதிக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, பெப். 1

வரையறைக்குட்பட்டு நாட்டிலிருந்து கருங்கல்லை ஏற்றுமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய ஒரு மில்லியன் மெற்றிக் தொன் கருங்கற்களை ஏற்றுமதி செய்வதற்கான ஏற்பாடுகளை ஆராய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது.

நிர்மாணம் மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கு கருங்கல்லின் பயன்பாடு ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பதனாலும் கருங்கல் சுரங்கத் தொழில் பணியாளர்கள் மற்றும் அது சார்ந்த சமூகங்களின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளமையாலும் இந்த முடிவை அரசாங்கம் எடுத்துள்ளது. (ச-இ)

# கடற்றொழில் அபிவிருத்திக்கு 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

கிளிநொச்சி, பெப். 1

வடமாகாண கடற்றொழில் அபிவிருத்திக்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கரைச்சிப் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற அபிவிருத்திக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தின் கடற்றொழில் அபிவிருத்திக்காக 500 மில்லியன் ரூபா அமைச்சின் ஊடாக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீடுகள் முறையாகவும் பயனுள்ள வகையிலும் பயன்படுத்தப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-27)

# 'ரின்' அபராதம் இடைநிறுத்தம்!

கொழும்பு, பெப். 1

வரி அடையாள எண்ணை ரின் (TIN) பெறாத நபர்களுக்கு அபராதம் விதிப்பதை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இடைநிறுத்தியுள்ளது.

நிதியமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஜனவரி முதலாம் திகதி முதல் 18 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு குடிமகனும் வரிக் கோப்பை ஆரம்பிக்க வேண்டியது கட்டாயமெனவும் குறித்த வரி அடையாள எண்ணைப் பெறாதவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்றும் முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# கடவுச்சீட்டு மோசடி; அவதானம் தேவை

கொழும்பு, பெப். 1

போலி வெளிநாட்டு விசாக்கள் அல்லது பயண ஆவணங்களைப் பெற்றுத் தருவதாக பணம் வசூலிக்கும் போலிப் பயண முகவர்களிடம் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

ஒரு பயணி தனது விசா அல்லது வேறு ஏதேனும் பயண ஆவணத்தின் நம்பகத்தன்மை குறித்து சந்தேகம் கொண்டால், அவர்கள் செல்ல விரும்பும் நாட்டின் அந்தந்தத்தூதரகம் அல்லது வெளிநாட்டுத்தூதரகம் ஊடாக சரிபார்க்கலாம்.

அண்மையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பயணி ஒருவர் போலிக்கடவுச்சீட்டுடன் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் பயண முகவர் ஒருவர் அவருக்கு விசா ஏற்பாடு செய்தார் என்றும் அதற்காக அவர் ஒரு மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணம் செலுத்தினார் எனத் தெரிவித்திருந்தார்.

இத்தகைய போலிப் பயணமுகவர்களிடம் மிகுந்த எச்சரிக்கை அவசியம் என்று குடிவரவு அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுவிக்கப்பட்ட காணிகளில் 500 ஏக்கரை சுவீகரிக்க முயற்சி

யாழ்ப்பாணம், பெப். 1

**வலிகாமம் வடக்கில் மக்களிடம் மீளக் கையளிக்கப்பட்ட நிலங்களிலிருந்து 500 ஏக்கரைச் சுவீகரிக்க இரகசிய முயற்சி இடம்பெறுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.**

இதற்கமைய குரும்பசிட்டி, குப்பிழான் வடக்கு, வசாவிளான், கட்டுவன், கட்டுவன் மேற்கு ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய வகையிலேயே 500 ஏக்கர் நிலத்தைச் சுவீகரிக்க இரகசிய முயற்சி முன்னெடுக்கப்படுகின்றது. யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி எனும் பெயரில் மேலதிக தேவைகளுக்காகத் தற்போது படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களுடன் 500 ஏக்கரைச் சுவீகரித்துத் தருமாறு விமானப் போக்குவரத்து அதிகாரசபை விடுத்த கோரிக்கைக்கமைய நில அளவைத் திணைக்கள அதிகாரிகளும், அந்தந்தப் பகுதிக் கிராம அலுவலர்களும் நேற்றுமுன்தினம் இடங்களைப் பார்வையிட்டுச் சென்றனர். (ஒ-66)

## மயங்கியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 1

மயங்கி வீழ்ந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட சுழிபுரத்தைச் சேர்ந்த 49 வயதான குடும்பப் பெண் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். (ஒ-125)

## சிசு உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 1

28 நாள்களேயான சிசு யாழ். போதனா மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளது.

சிசுவின் வயிறு வீங்கிய நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையிலேயே உயிரிழந்துள்ளது. இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையில், சிசுவின் குடல் முறுக்கப்பட்டிருந்தமை காரணமாக உயிரிழப்பு சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ஒ-125)

## பொருளாதார நெருக்கடி மாணவி உயிர்மாய்ப்பு!

### பதுளையில் துயரம்

யாழ்ப்பாணம், பெப். 1

இம்முறை நடைபெறவுள்ள சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவியொருவர் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி கல்வியைத் தொடர முடியாத நிலையில் உயிர்மாய்த்துக் கொண்டுள்ளார். இந்தச் சம்பவம் பதுளை - புவக்கொடமுள்ள பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

16 வயதுடைய ஆயிஷா பர்வீன் என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக விசாரணைகளை பதுளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

## 189,574 சுற்றுலாவிகள் ஜனவரியில் வருகை

கொழும்பு, பெப். 1

இந்த ஆண்டின் ஜனவரி மாதத்தின் முதல் 28 நாள்களில் மட்டும் ஒரு இலட்சத்து 89 ஆயிரத்து 574 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்தனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தகவல் வெளியிட்டுள்ளது.

தினசரி சுற்றுலாப் பயணிகளின் வருகை சுமார் 6 ஆயிரத்து 770. அளவில் பதிவாகியுள்ளது.

இந்தியாவிலிருந்தே அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மாலைதீவு - இலங்கையிடையே அம்புலன்ஸ் விமான சேவை

கொழும்பு, பெப். 1

மாலைதீவுக்கும் இலங்கைக்கும் இடையில் அம்புலன்ஸ் விமான சேவை எதிர்வரும் மார்ச் மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மாலைதீவு போக்குவரத்து,விமான சேவைகள் அமைச்சர் கப்டன் மொஹமட் அமீனுக்கும் இலங்கைத் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கும் இடையில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மாலைதீவில் வசிக்கும் மக்கள் விபத்துகள் மற்றும் சுகவீனம் காரணமாக அவசரமாக இலங்கைக்கு வந்து சிகிச்சை பெறுவதற்காக இந்த சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-6)

## சாந்தன் நாடு திரும்ப உதவுமாறு டக்ளஸிடம் குடும்பத்தார் கோரிக்கை

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்ட நிலையில் தற்போது மருத்துவமனையிலுள்ள சாந்தனை இலங்கைக்கு அழைத்து வர துரித ஏற்பாடு செய்யுமாறு அவரது தாயாரும் சகோதரர்களும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமைச்சரைச் சந்தித்த குடும்பத்தினர் தெரிவித்த கருத்துக்கு அமைய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தொலைபேசியில் பேசினார்.

இது தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொண்டு தருவதாக உறுதியளித்துள்ளார். (ஒ-100)

## பதினம் தெரியுமோ?

**ஊர் ரண்டுபட்டால் மட்டுமில்ல வீடு ரண்டு பட்டாலும் கூத்தாடியளுக்கு கொண்டாட்டம் தான். பதவிப் பிடுங்குப்பாட்டால வீட்டுக்கட்சி ரண்டுபட்டுப் போய் இருக்குது. அதால வெளிக்கட்சியளுக்கு கடும் புளுகம். நீதிமன்றம்,வழக்கு அது இதெண்டு கட்சி சிதறப்போகுதெண்டுதான் அவையின்ர நினைப்பு. ஆனால் என்னதான் அடிச்சாலும், பேசினாலும் தங்கட கட்சியின்ர மானத்தை இனிமேல் காத்தில பறக்கவிடக்கூடாது எண்ட விசயத்தில ரண்டுதரப்பும் இப்ப உறுதியா இருக்கினமாம். எப்பிடியும் அடுத்த பொதுச்சபை கூடுறதுக்கு இன்னும் ஒருமாசமெண்டாலும் எடுக்கும். அந்த அவகாசத்துக்குள்ள நிலைமையைச் சரியாக்கிறதுக்கு ரண்டு தரப்பும் இறங்கி வேலை செய்யினம் எண்டு கதை.**

**திருகோணமலையில குழப்பம் நடந்த அடுத்தநாள் மாவையர் வீட்டில இதைப் பற்றி கதைபட்டும், அண்டைக்கும் ஒரு முடிவும் வரேலை. எதுக்குமே கோபப்படாத மாவையர் கூட அண்டைக்கு கோபத்தில கொஞ்சம் கத்தித்தான் கதைச்சவராம். இப்ப ஒரேயொரு பதவியிலதான் இழுபறி. பொதுச் செயலாளர் பதவியை குகதாசனுக்கு குடுக்கவேணும் எண்டதுதான் சுமந்திரன் தரப்பின்ர விருப்பம். ஆனால் சிறீநேசனுக்கு குடுக்கோணும் எண்டது சிறியர் தரப்பின்ர ஆசை. இது ரண்டுக்கும் இடையில நிக்கிறவைதான் அல்லாடிக்கொண்டிருக்கினம். குகதாசனுக்கும் சம்பந்தருக்கும் இப்ப கொஞ்சக்காலமா எட்டாப் பொருத்தம். அப்பிடிச் சம்பந்தருக்கு பிடிக்காத ஒருத்தரை, கட்சிக்கு செயலாளராக்கிறதுக்கு திருகோணமலைக் கட்சிமட்டத்திலயே பெரும் எதிர்ப்பு இருக்கு. ஆனாலும் குகதாசனிட்ட ஒரு செயலாளருக்குரிய எல்லாத்தகுதியும் இருக்கு. அதோட கட்சியின்ர கனடாக்கிளையோடையும் கடும் நெருக்கம். அதால அவரிட்ட செயலாளர் பதவியைக் குடுத்தால் கட்சியை நல்லபடியாக் கொண்டு போகலாம் எண்டது நடுநிலைமையில நிக்கிறவையின்ர கருத்து.**

**எண்டாலும் குகதாசன், சுமந்திரன் தரப்பின்ர ஆள் எண்டதால, போனமுறை துரைராஜசிங்கத்தார் கட்சித்தலைவர் மாவையருக்கே தெரியாமல் கலையரசனை தேசியப்பட்டியல் எம்.பி.யாக்கின மாதிரி, இவரும் ஏதும் முதுகில குத்திப்போடுவாரோ எண்டதுதான் சிறீதரன் தரப்பின்ர சந்தேகம். ஆனாலும் உண்மையில குகதாசன் எல்லாரும் நினைக்கிறமாதிரி இல்லை. அந்தாள் சுமந்திரன் பக்கமோ இல்லாட்டி சிறீதரன் பக்கமோ சாயாமல் தனித்தவில் வாசிக்கக்கூடிய ஆள். சிலவேளை தன்னைப் பதவிக்குக்கொண்டாறதுக்கு உதவினவர் எண்டு சுமந்திரனுக்கு சப்போர்ட் பண்ணினாலும், சத்தியலிங்கத்தார் மாதிரி, கட்சித்தலைவருக்கே தெரியாமல் காரியங்கள் செய்யக்கூடியவர் இல்லை எண்டும் ஒரு பக்கத்தால கதை வருகுது. இதையெல்லாம் கூட்டிக் கழிச்சுப் பார்த்திட்டு, முதல் ஒரு வருசம் குகதாசனும், அடுத்த வருசம் சிறீநேசனும் பொதுச் செயலாளரா சுழற்சிமுறையில இருக்கிறதுக்கு ரண்டு தரப்பும் ஓமெண்ட மாதிரி அரசல் புரசலாத் தெரியுது. அப்பிடி நடந்தால், இந்தப் பிரச்சினை சுமுகமாப் போறதுக்கு சான்ஸ் இருக்குது. என்னவோ, தலைவர் திருத்தித் தந்த வீட்டை உடையாமல் பார்த்தால் நல்லது.**

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைமையில் கசிப்பு; இளைஞர்கள் கைது!

ஊர்காவற்றுறைப் பகுதியில் கசிப்புடன் இளைஞர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இரு வேறு சுற்றிவளைப்புகளின் போதே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

33 வயதான இளைஞர் ஒருவரிடம் இருந்து ஒன்றரை லீற்றர் கசிப்பும், பிறிதொருவரிடம் இருந்து 10 லீற்றர் கசிப்பும் மீட்கப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ம-125)

## அறிவித்தல்


யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள **Kajamugan Tingering Work .Shop** இல் திருத்த வேலைகளுக்காக வந்த Ford Car (8 சிறி - XXXX). Toyoto Corolla 14-xxxx, A30 ஆகிய இலக்கங்களை கொண்ட வாகனங்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் உள்ளன. எனவே இன்றிலிருந்து ஒரு மாத காலப்பகுதிக்குள் மீட்காத பட்சத்தில் இதற்கு நாங்கள் எந்தவித பொறுப்பும் இல்லை என்பதை அறியத்தருகின்றோம்.

**தகவல் :- ரட்ணம்**

**076 9059331, 077 622 4281, 077 680 5923**

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 14 . 12 . 1951



மறைவு 30 . 01 . 2024

**கார்த்திகேசு செல்லத்துரை**

(உரிமையாளர் சோபனா நகை மாளிகை)

எமது நண்பர் (சிறிநதியா நகை மாளிகை) சத்தியரூபனின் மைத்துனராகிய கார்த்திகேசு செல்லத்துரை அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைவதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சாரங்கா நகை மாடம்**
**157/1 கஸ்தூரியார் வீதி**
**யாழ்ப்பாணம்**

**உரிமையாளரும்,**
**ஊழியர்களும்.**

(CS 27733)V-1

## மரண அறிவித்தல்



பிறப்பு 22.12.1948 இறப்பு 23.01.2024

### திருமதி ஜெயலக்ஷ்மி யோகராஜா

யாழ். வல்வெட்டித்துறை. "காட்டுவளவை" பிறப்பிடமாகவும். "கொழும்பு, பருத்தித்துறை. சென்னை. லண்டன்" ஆகிய இடங்களில் வசித்தவருமான திருமதி ஜெயலக்ஷ்மி யோகராஜா (லக்ஷ்மி அம்மா / தங்கன்) அவர்கள் கடந்த (23.01.2024) செவ்வாய்க்கிழமை தை மாத பூர்வபக்க திரயோதசி திதியில் இறைவனடி எய்தினார். அன்னார் காலஞ்சென்ற நடராஜா (ராசதுரை) - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் ஏக புதல்வியும். அமரர் நடராஜா யோகராஜாவின் அன்பு மனைவியும். காலஞ்சென்ற திருச்சிற்றம்பலம் ராசலிங்கம்) - யோகாம்பிகை தம்பதிகளின் பாசமிகு மருமகளும். பார்த்தீபன் (பாபு-UK). காண்டீபன் (Australia). பகீரதன் (பகி-UK) ஆகியோரின் அன்புத் தாயாரும். சௌமியா. சுதாஸ்வரி. இன்கா ஆகியோரின் அன்பு மாமியாரும். பாவலா. நாவலன். மாவலன், ஹரி. ஹேசல் ஆகியோரின் ஆசை அப்பாச்சியும். காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரமூர்த்தி. தணிகாசலம் (கலாநிதி ஸ்டோர்ஸ்). திருநாவுக்கரசு (சந்திரா ஸ்டோர்ஸ்). சுந்தரமூர்த்தி மற்றும் தற்போது வல்வெட்டித்துறையில் வசிக்கும் விஸ்வநாதப்பிள்ளை (தம்பி அண்ணா). தங்கராசா. ராமச்சந்திரன் (ராமு கடை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (31.01.2024) புதன்கிழமை காலை 8.30 முதல் 10.30 வரை Hill House St Helier Hill House, Bishopsford Road, Morden, SM4 6BLஇல் நடைபெற்று. காலை 11.15 முதல் பகல் 12.15 வரை North East Surrey Crematorium, Lower Morden Lane, Morden, SM4 4NUஇல் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


**தகவல்: குடும்பத்தினர்**
**பார்த்தீபன் (பாபு) மகன் : +447956305066**
**காண்டீபன் (காண்டீ) - மகன் : +61 421370204**
**பகீரதன் (பகீ)- மகன் : +44 7960947221**

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 12.02.1951 மறைவு 30.01.2024

## கார்த்திகேசு செல்லத்துரை

(சோபனா நகை மாளிகை உரிமையாளர்)



விழிகள் இமைக்க மறந்திட்ட நொடிகளில் கூட
சிந்தித்த வேளையெல்லாம் சிந்தனையில் உந்தன் நிழல்
தொலைவாகிப் போனாலும் தொலைந்து போகாத உன்
நினைவலைகளை மீட்டிட நினைக்க வலிக்கிறது நெஞ்சம்
விழிநீர் சொரிந்திட விம்மித் தவிக்கிறது மனம்
அழுது விம்முகின்ற நாம் மெழுகுபோல் உருகுகின்றோம்
பரிவு கொண்ட எமைவிட்டு பிரிந்து சென்றதேனோ.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!**

**அன்னாரின் பிரிவால் துயருறும்**
**உரிமையாளர், ஊழியர்கள்**

**N.S.R. திருமண மண்டபம்**
**இல.01, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**நடராஜா பரமேஸ்வரி**
**மணிமண்டபம்**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கழுதை தேய்ந்து கட்டெறும்பான ஒற்றுமை


2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னரான 15 ஆண்டுகளில் அரசியல் ரீதியாகப் பலப்பட்டிருக்க வேண்டிய தமிழ் மக்களை, தமிழ் அரசியல் தலைமைகள் பிரித்து வைத்திருக்கின்றன. தமிழ் அரசியல் தரப்புகளும் பிரிந்து பல்வேறு கூறுகளாக இருக்கின்றன. ஒவ்வொரு அணியினரும் தம்மை உத்தமர்கள் என்று நிரூபிப்பதற்காக மற்றையவர்கள் மீது சேற்றை வாரியிறைத்துக்கொண்டிருக்கின்றார்கள்.

2009ஆம் ஆண்டு வரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்த தமிழ்த் தேசியத் தரப்புகள் 2010ஆம் ஆண்டிலிருந்து உடையத் தொடங்கின. காலத்துக்குக் காலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து ஒவ்வொரு கட்சிகளாக வெளியேறி இன்று அவர்கள் அனைவரும் நவக்கிரகங்கள் போன்று ஒவ்வொரு திக்குகளில் நிற்கின்றனர். இந்த நிலையில் தமிழ் மக்களின் நீண்ட பாரம்பரியமான இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது வரலாற்றில் முதன்முறையாக தலைமைத்துவத்துக்கான தேர்தலை எதிர்கொண்டது. தேர்தலில் போட்டியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன் இருவருமே, கட்சியின் ஜனநாயகத்துக்கு சிறந்த எடுத்துக்காட்டு என்று பெருமையாக இதைக் கூறினர். இந்தத் தேர்தலால் கட்சி பிளவுபடும் அபாயம் இருக்கின்றது என்று பல தரப்புகளும் திரும்பத் திரும்பக் கூறி வந்தபோதும், தலைமைத்துவத்துக்குப் போட்டியிட்ட இருவரும் அவ்வாறு எந்தப் பிளவுகளும் வராது, கட்சி ஒற்றுமையாக இருக்கும். எவர் வெற்றி பெற்றாலும் மற்றையவர் இணைந்து செயற்படுவார் என்றும் உறுதிமொழி வழங்கினர். கட்சித் தலைமைத்துவத் தேர்தலில் சிறீதரன் வெற்றிபெற்றார். தேர்தல் முடிந்த கையோடு, சிறீதரனுடன் இணைந்து செயற்படுவேன் என எம்.ஏ.சுமந்திரனும் தெரிவித்திருந்தார்.

ஆனால் அவை நடைமுறைக்குச் சாத்தியப்பட்டு வராது என்பதையே கடந்த வாரம் திருகோணமலையில் நடைபெற்ற அந்தக் கட்சியின் பொதுச் செயலர் தெரிவு விவகாரம் சுட்டிக்காட்டியிருக்கின்றது. கட்சியின் தலைவராக வடக்கைச் சேர்ந்த ஒருவர் தெரிவானால், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவருக்கே கட்சியின் பொதுச்செயலர் பதவி வழங்கப்படுவது மரபாக இருந்து வந்தது. இந்தப் பாரம்பரியத்தை மையமாகக் கொண்டே கட்சிக்குள் குழப்பத்துக்கான தூபம் போடப்பட்டிருக்கின்றது. கிழக்கைச் சேர்ந்த இருவர் பொதுச்செயலர் பதவிக்கு வர விரும்பினர். கட்சிக்குள் இருக்கும் இரு எதிரெதிர் அணிகளும் தம் சார்பில் ஒவ்வொருவரை ஆதரித்தன. அவர்களுக்கே பதவி என்பதில் விடாப்பிடியாகவும் நின்றன. இதனால் மத்திய குழுவில் வலிந்து ஒரு முடிவு எடுக்கப்பட்டதால், பொதுக்குழுவில் அது சவாலுக்கு உட்படுத்தப்பட்டு, இறுதியில் குழப்பத்தில் முடிந்தது.

இப்போது தமிழரசுக் கட்சி இரு அணிகளாக இருப்பது உறுதியாகியிருக்கின்றது. நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் தலைமைத்துவக் குறைபாடாக வெளிப்படுத்துவதற்காகவே இந்தக் குழப்பங்கள் வலிந்து உருவாக்கப்பட்டிருக்கலாம். இந்த நிலையில், 2009ஆம் ஆண்டுக்கு முற்பட்ட கூட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டதும் சிறீதரன் கூறியிருந்தமை எப்படி சாத்தியமாகப்போகின்றது? அவரது சொந்தக் கட்சியை ஒற்றுமைப்படுத்துவதே இப்போது குதிரைக் கொம்பாக இருக்கப்போகின்றது. அப்படியிருக்கையில், 2009ஆம் ஆண்டுக்கு முந்தைய கூட்டமைப்பை உருவாக்குவதெல்லாம் சாத்தியமாகுமா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைந்து சிதறுண்டு இறுதியில் தமிழரசுக் கட்சியும் உடைந்து சிதறும் நிலையில் வந்து நிற்கின்றது தமிழர் அரசியல்.




# ஊழல் மோசடியற்ற நாடு; இலங்கை பின்னடைவு!

கொழும்பு, பெப். 1

**உலகில் ஊழல் மோசடிகளற்ற நாடுகள் பட்டியலில் இலங்கை பின்னடைவைச் சந்தித்துள்ளது.**

ஊழல் மோசடிகளற்ற நாடுகளைப் பட்டியலிடுவது தொடர்பிலான மதிப்பாய்வுகளில் இலங்கை 34 புள்ளிகள் மட்டுமே பெற்று 115 ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இந்தப்புள்ளி 2022 ஆம் ஆண்டை விடவும் குறைந்த புள்ளியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கடன் சுமை மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையற்ற காரணிகளே இலங்கை பின்நிலைக்குத்தள்ளப்படுவதற்கு காரணமென அரசியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை ஊழல் மோசடிகளற்ற நாடுகளின் வரிசையில் டென்மார்க் முதல் இடத்தையும், பின்லாந்து இரண்டாம் இடத்தையும், நியூஸிலாந்து மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளன. (ச-இ)

## பழங்கள் விலை கிடுகிடு உயர்வு

கொழும்பு, பெப். 1

நாட்டில் கடந்த சில நாள்களாகவே அனைத்து பொருளாதார நிலையங்களிலும் மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துக் காணப்படும் நிலையில் அனைத்து வகையான பழங்களின் விலையும் உயர்ந்துள்ளன என்று பழங்கள் விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதங்களில் பெய்த மழை காரணமாக இறக்குமதிச் செலவு உயர்ந்துள்ளதால் பழங்களின் விலை அதிகரித்துள்ளது என்று பழ விற்பனையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-இ)

## சுதந்திரதினத்துக்காக திங்களன்று விடுமுறையா?

கொழும்பு, பெப். 1

சுதந்திரதினத்தை முன்னிட்டு எதிர்வரும் திங்கட்கிழமை விசேட விடுமுறையை வழங்குவது தொடர்பில் இன்னும் தீர்மானம் எடுக்கப்படவில்லை – என்று உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

சுதந்திரதின ஏற்பாடுகள் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது சுதந்திரதினம் இம்முறை ஞாயிற்றுக்கிழமை வருவதால், திங்கட்கிழமை விசேட விடுமுறை வழங்கப்படுமா? என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தாலும், இன்னும் அவ்வாறானதொரு தீர்மானத்தை துறைசார் அமைச்சர் என்ற வகையில் பிரதமர் எடுக்கவில்லை – எனவும் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (ம-44)

## அமைச்சுகளுக்கு வாகன இறக்குமதி

கொழும்பு, பெப். 1

சில அமைச்சுகளுக்கான வாகன இறக்குமதிக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வாகனங்களின் இறக்குமதியை அரசாங்கம் தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்துள்ளது.

இந்தநிலையில் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு ஆகியனவற்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ச-இ)

## நிதிதிரட்டல்!

சமூகசேவைகளை முன்னெடுக்கும் முகமாக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவபீட மாணவர்கள் விசேட செயற்திட்டத்தை யாழ். பல்கலைக்கழக முன்றிலில் முன்னெடுத்தனர்.

2024ஆம் ஆண்டின் முகாமைத்துவ வாரத்தின் ஒரு பகுதியாக வாகன சுத்திகரிப்பு மற்றும் உணவுத் திருவிழா என்பவற்றை யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் நேற்றையதினம் மாணவர்கள் முன்னெடுத்தனர். (ம-125)

## நாளை

02.02.2024

வெள்ளிக்கிழமை

தை – 19

சுபநேரம் : 06.36 – 08.06

ராகுகாலம் : 10.06 – 12.36

## நாளொரு நல்வார்த்தை

எவ்வளவு மெதுவாகச் செல்கிறீர்கள் என்பது ஒரு விடயமே அல்ல, எவ்வளவு தூரம் நிற்காமல் செல்கிறீர்கள் என்பதே முக்கியம்.

- கன்பூசியஸ் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்காவால் கடந்த வருடம்

# 238 பில்லியன் டொலர் ஆயுதங்கள் விற்பனை!

**வொஷிங்டன், பெப். 1**

**கடந்த வருடத்தில் மட்டும் 238 பில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்கள் அமெரிக்காவால் விற்பனை செய்யப்பட்டுள்ளன. உலகெங்கும் கடந்த வருடம் விற்பனை செய்யப்பட்டுள்ள ஆயுதங்கள் மற்றும் இராணுவத் தளபாடங்கள் தொடர்பான தகவல்கள் ஆய்வுகளின் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ளன.**

கடந்த சில வருடங்களாகவே இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ள அமெரிக்கா, கடந்த வருடமும் ஆயுத விற்பனையில் முதலிடத்தைத் தக்கவைத்துள்ளது.

இதன்படி 238 பில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களை கடந்த வருடத்தில் அமெரிக்கா விற்றுள்ளது. இந்தப் பட்டியலில் போலந்து அடுத்த இடத்தில் உள்ளது. 29.75 பில்லியன் டொலர் பெறுமதியான ஆயுத வர்த்தகத்தில் போலந்து ஈடுபட்டுள்ளது. 8.5 பில்லியன் டொலர் பெறுமதியான ஆயுத விற்பனையுடன் ஜேர்மனி அடுத்த இடத்தில் உள்ளது.


சர்வதேச ஆயுத விற்பனையில் வழமையாக ரஷ்யா தவிர்க்க முடியாத இடத்தில் இருக்கும். ஆனால் கடந்த வருடம் முழுவதும் உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பு இடம்பெற்றதால், தனது ஆயுத இருப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் ரஷ்யா ஆயுத விற்பனையில் ஈடுபடவில்லை. ரஷ்யாவிடம் இருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய மற்றைய நாடுகளும் நாட்டம் காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



நீர்வேலி தெற்கு ஞானவைரவர் கோயிலின் மஹா கும்பாபிஷேகம் பக்திபூர்வமாக இடம்பெற்றது. பிரதான கும்பம் சிவாச்சாரியர்களால் எடுத்துவரப்பட்டு ஸ்தூபி அபிஷேகம் இடம்பெற்றது. (எ-17)



கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் உற்பத்தித்திறன் செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற பொதுஅறிவுப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர் களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற ஐந்து உத்தியோகத்தர்களுக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் பரிசில்களை வழங்கினார். (ப-113)




குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தின் பதினொராவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு ஆச்சிரம முன்றிலில் கடந்த ஞாயிற்றுக் கிழமை பொங்கல் மற்றும் பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. (ப-66)

**The Royal College of Jaffna**
3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப்பயில பிரத்தியேகவகுப்புகள்.
By: ந.விக்னேஸ்வரன் ஆச்சார்யார்.
(25 வருட அனுபவம்)
குபேரன் கட்டட மாடி, சங்கானை.
Tel: 077 675 1649
(CS33779) N-1)

## ஆத்மா சாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்

தோற்றம் 23.05.1938



மறைவு 02.01.2024

கடந்த 02.01.2024 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் தம்பிஐயா கதிரவேற்பிள்ளை

**(திதி: அபரபட்ச ஸப்தமி)**

அவர்களின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையும், மதியபோசன நிகழ்வும் இன்று (01.02.2024) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அந் நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அன்னாரின் மரணச்செய்தியறிந்து நாம் துயருற்று இருந்தவேளை எமது குடும்பத்தாரோடு இணைந்து உதவிகள் புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இறுதிச்சடங்கில் கலந்துகொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செல்லையா வீதி,
அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.**

**குடும்பத்தினர்
077 900 9420**

(c24681) (2.6)

## மரண அறிவித்தல்

பிறப்பு 18 . 11 . 1944



இறப்பு 31 . 01 . 2024

### பாலசரஸ்வதி (குணம்) இரங்கராஜசர்மா

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு முகத்துவாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசரஸ்வதி இரங்கராஜசர்மா அவர்கள் நேற்று (31.02.2024) புதன்கிழமை கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரகுருக்கள் நாகரத்தினம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இரங்கராஜசர்மாவின் அன்பு மனைவியும், அரவிந்தசர்மா (ரமேஷ் - கொழும்பு), இந்துஷா (கொழும்பு), ஐங்கரன்சர்மா (இலண்டன்), ஆனந்தபாபுசர்மா (இலண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாரதி, கோவர்த்தனக்குருக்கள், விலாசினி, லாவண்யா ஆகியோரின் அன்பு மாமியும், சிவசுப்பிரமணிய ஐயர், காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் சிவகுமாரக்குருக்கள் (கரைப்பிரான் பிள்ளையார் கோவில்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஸ்ரீயாதவன், கைலாசநாத பிரவீன் குருக்கள், பரணிகா, மிதுஷன் சர்மா, ஸ்மிருத்திகா, ஆதியா, அஹானா ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் இன்று (01.02.2024) வியாழக்கிழமை பொரளை ஜயரட்ன மலர்ச்சாலையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சோம. சிவகுமாரக்குருக்கள் (சகோதரன்)
ஆனைக்கோட்டை.**

(CS28008) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக பணக்காரர்கள்; முதலிடத்தில் பிரான்ஸ் தொழிலதிபர்



வொஷிங்டன், பெப். 1
உலக பணக்காரர் பட்டியலில் கடந்த ஆண்டு முதலிடத்தில் இருந்த எலான் மஸ்க்கை பின்னுக்குத் தள்ளி, பிரான்ஸ் தொழிலதிபர் பெர்னார்ட் அர்னால்ட் முதலிடத்தைப் பிடித்துள்ளார். (ச-இ)



## பிரான்ஸில் வைக்கோல் எரித்து விவசாயிகள் போர்!

பரிஸ், பெப். 1
எரிபொருள் விலையேற்றம், மானிய விலைகளில் உரங்கள் வழங்காமை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து, பிரான்ஸின் பல பகுதிகளில் விவசாயிகள் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிரான்ஸில் தொடர்ச்சியாக அதிகரித்துவரும் எரிபொருள் செலவைக் கருத்திற்கொண்டும், புதிய சுற்றுச்சூழல் விதிமுறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பிரான்ஸ் விவசாயிகள் தொடர்ச்சியாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று தூஸ் விமான நிலையத்துக்குச் செல்லும் வீதிகளில் வைக்கோல்களை எரித்து விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம)

# மருத்துவமனைக்குள் புகுந்து பலஸ்தீனர்கள் படுகொலை!

## இஸ்ரேல் படைகள் வெறியாட்டம்

காஸா, பெப். 1
ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் ஜெனின் நகரில் அமைந்துள்ள மருத்துவமனைக்குள் புகுந்து இஸ்ரேலியப் படைகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலஸ்தீன இளைஞர்கள் மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

இப்னு சினா மருத்துவமனைக்குள் இந்த நபர்கள் தூங்கிக் கொண்டிருந்தபோது, இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பலஸ்தீன சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஆனால், பலஸ்தீனத்தின் கருத்து களை இஸ்ரேல் முற்றாக நிராகரித் துள்ளது. மருத்துவமனைக்குள் பதுங்கியிருந்த ஹமாஸ் பயங்கரவாதிகளையே தமது படைகள் கொன்றதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

மருத்துவமனையின் தாதியர்கள் போன்றும், நோயாளிகள் போன்றும், ஹியாப் அணிந்துகொண்டும் இஸ்ரேலியப் படைகள் நுழையும் வீடியோக்கள் வெளியாகி உலகெங்கும் வைரலாகியுள்ள நிலையில், இஸ்ரேல் இராணுவத்தின் இந்த நடவடிக்கைகளுக்கு அந்த நாட்டின் அமைச்சரவை பாராட்டுத் தெரிவித்துள்ளது. (ம)



**INVITATION FOR BIDS (IFB)**
**TEACHING HOSPITAL, JAFFNA**
**பொருட்களிற்கான விலைமனுக்கோரல்**

போதனா வைத்தியசாலையின் பெறுகைக்குழு கடந்த 22.01.2024 அன்று Daily News Dinakaran மற்றும் Dinamia ஆகிய பத்திரிகைகளில் வெளியிட்ட கேட்புமனு விளம்பரத்தில் கோரப்பட்ட பொருட்கள் தொடர்பான கொள்ளலில் வடபகுதி வர்த்தகர்களும் பங்கேற்குமாறு இத்தால் அறிவித்துக்கொள்கின்றோம். (இதனை எமது வைத்தியசாலையின் வலைத்தளத்திலும் பார்வையிடலாம் www.thjafna.lk)

பணிப்பாளர் / தலைவர்,
பிராந்திய பெறுகைக்குழு
31.01.2024

(er.41685) (N-1)

**ஆண் நாய் தேவை**
ஒரு வயது, இரண்டு வயதுடைய நல்ல இன ஆண் நாய் தேவை.
தொடர்பு: 077 659 0606
077 132 2291

**வேலைக்கு ஆள் தேவை**
யாழ் நகரில் இயங்கும் பிரபல்ய நகை வியாபார விற்பனை நிலையத்திற்கு (சாரங்கா நகைமாடம்) தகைமையுடைய ஆண்/பெண் கணக்காளர் தேவை
தொடர்புகளுக்கு: 021 222 6972
077 429 7571
077 357 7212




"Ammanai Saran Adainthal Athika Varamperalam"
SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST
5 Chapel Road, London W13 9AE. Phone:0208 810 0835
Founded:10-08-1991 Charity No:1014409




www.ammanealing.org
Email:info@ammanealing.org









எமது ஆலயத்தில் கீழ்வரும் பணிநிலைகளுக்கான தகுதியான விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன. தங்கள் பற்றிய முழு விபரங்களுடன் மேல் உள்ள மின்அஞ்சல் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். **REF:SKTAT21/03/24**

**பணிநிலை 1 மகோற்சவ சிவாச்சாரியார் (Hindu religious workers with non-pastoral role)**

**தகமைகள்:** விண்ணப்பதாரி மகோற்சவ குருவாக தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு குறையாமல் பிரபல்யமான ஆலயங்களில் பணியாற்றி இருக்க வேண்டும்.

**கடமைகள்:** ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் மகோற்சவ பூசைகள் செய்தல்

**வேதனம்:** பிரித்தானிய வேதன முறைமகளுக்கமைவானது. விண்ணப்பதாரிகளின் சிறப்புத் தகமைகளை கவனத்தில் கொண்டு நிர்ணயம் செய்வதுடன் அடியார்கள் வழங்கும் தட்சணை பங்கிட்டு வழங்கப்படும்.

**பணிநிலை 2 ஆலய சிவாச்சாரியார் (Hindu religious workers with non-pastoral role)**

**தகமைகள்:** விண்ணப்பதாரி ஆலய குருவாக தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு குறையாமல் பிரபல்யமான ஆலயங்களில் பணியாற்றி இருக்க வேண்டும்.
**கடமைகள்:** ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் பூசைகள் செய்தல்

**பணிநிலை 3 நாதஸ்வர தவில் கலைஞர்கள் (Hindu religious (Musicians) workers)**

தகமைகள்: நாதஸ்வர தவில் மேதைகளுக்கான சான்றிதழ்களைக் கொண்டிருப்பதுடன் தமது பிராய காலத்தில் இருந்து இப்பணியைச் செய்து கொண்டிருப்பவராக இருக்கவேண்டும்

கடமைகள்: ஆலய பூசைகாலங்களில் மங்கள இசை இசைத்தல்

வேதனம்: பிரித்தானிய வேதன முறைமகளுக்கமைவானது. விண்ணப்பதாரிகளின் சிறப்புத் தகமைகளை கவனத்தில் கொண்டு நிர்ணயிக்கப்படும்

**விண்ணப்ப முடிவு திகதி: 01-03-2024**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மலேசியாவுக்கு புதிய மன்னர்**

மலேசியாவின் 17ஆவது மன்னராக சுல்தான் இப்ராஹிம் சுல்தான் இஸ்கந்தர் பதவியேற்றுள்ளார். கோலாலம்பூரில் உள்ள தேசிய அரண் மனையில் அவரது பதவியேற்பு விழா கோலாகலமாக நேற்று நடைபெற்றது.

(ச-இ)


# 23 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் ஆறுமுகம் முத்தையா ஐயாத்துரை
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)

தோற்றம் 15 . 08 . 1932
மறைவு 14 . 01 . 2001

திதி: அபரபக்க சஷ்டி

சென்றன ஆண்டுகள் இருபத்திமூன்று
இன்றுடன் நீர் எமைப்பிரிந்து
குன்றாதும் நீங்கா நினைவுகள்
என்றும் எம் நெஞ்சில் நிறைந்து

9/1, சுப்ரமணியம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(CS 29333)

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## சங்கரப்பிள்ளை பாலச்சந்திரன்



யாழ் மாவிட்டபுரம் கீரிமலை வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டன் Felthamத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை பாலச்சந்திரன் அவர்கள் கடந்த (27.01.2024) சனிக்கிழமை அதிகாலை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு சுப்பர் சங்கரப்பிள்ளை, திருமதி தங்கமணி சங்கரப்பிள்ளையின் அன்புப் புதல்வனும், திரு சின்னத்துரை இராசா, திருமதி சுந்தரம் இராசா ஆகியோரின் அன்பு மருமகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், பாலசுப்பிரமணியம் (லண்டன்), கமலாம்பிகை (இலங்கை), பாலசிங்கம் (லண்டன்), காலஞ்சென்ற கணேசமூர்த்தி, கணேசானந்தன் (லண்டன்), லகிதேவி (சுவீடன்), காலஞ்சென்ற லீலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுந்தரராஜன் (இலங்கை), இராஜேஸ்வரி (கனடா), ரவீந்திரராஜா (இந்தியா), காலஞ்சென்ற மகேந்திரராஜா, சௌந்தரராஜா (லண்டன்) ஆகியோரின் அருமை மைத்துனரும், இந்துமதி, சிவசுப்பிரமணியம், சாந்தி, பாஸ்கரன், சுஜித்தா, காலஞ்சென்ற சங்கரலிங்கம், திருமணி, குகநாதன், தங்கவதி, குமுதினி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 04.02.2024 ஞாயிற்றுக் கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 03.03.1960
மறைவு 27.01.2024

கதிரமலை வீதி,
சுன்னாகம் தெற்கு.
077 331 8350

தகவல்:
சுந்தரராஜன்
(மைத்துனர்)

(CS 27319) S-1

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 14 . 02 . 1951
மறைவு 30 . 01 . 2024



## கார்த்திகேசு செல்லத்துரை
(சோபனா நகை மாளிகை உரிமையாளர்)

எமது நண்பன் கார்த்திகேசு செல்லத்துரை அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி !!!

உரிமையாளர்கள்

மைதிலி நகைமாடம்
89 V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ். மைதிலி ஜுவலர்ஸ்
79 Z, செட்டித்தெரு,
கொழும்பு - 11

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 14 . 02 . 1951
மறைவு 30 . 01 . 2024



## கார்த்திகேசு செல்லத்துரை
(சோபனா நகை மாளிகை உரிமையாளர்)

எமது நண்பன் கார்த்திகேசு செல்லத்துரை அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி !!!

உரிமையாளர்கள்

சிறி மதனா நகை மாளிகை
இல.155 M, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மதனா நகைமாடம்
இல.70, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 14 . 02 . 1951
மறைவு 30 . 01 . 2024



## கார்த்திகேசு செல்லத்துரை
(சோபனா நகை மாளிகை உரிமையாளர்)

எமது நண்பன் கார்த்திகேசு செல்லத்துரை அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி !!!

உரிமையாளர்கள்

நியூ லலிதாஸ் ஜுவல்லறி
இல.30,32, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நியூ நகுலா ஜுவல்லர்ஸ்
இல.45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயத்தைத் தொடர இழப்பீடு வழங்குங்கள்

முல்லைத்தீவு, பெப். 1

காலநிலை மாற்றம் மற்றும் நோய்த் தாக்கங்களால் பெரும்போகம் உள்ளிட்ட உப உணவுப் பயிர்ச்செய்கைகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இதற்குரிய இழப்பீட்டை அரசாங்கம் வழங்கினாலேயே விவசாயச் செய்கையை எம்மால் தொடரமுடியும் என்று முல்லைத்தீவு விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களையும் விட இந்த வருடம் அதிகளவு மழைவீழ்ச்சி மற்றும் நோய்த்தாக்கங்களால் விவசாயச்செய்கை பெரும் அழிவுக்குள்ளாகியுள்ளது. இதனால் அறுவடை வீழ்ச்சியுற்று வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது.

அடுத்துவரும் சிறுபோகச் செய்கைக்கே விதைநெல் வாங்குவதற்குக்கூட வழியின்றி சிக்கல்களை விவசாயிகள் எதிர்நோக்க நேரிடுகிறது. எனவே அரசாங்கம் எமக்கான இழப்பீடுகளை உடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர். (ச-500)




மேர்க்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ்
எல்லைகளுக்கு அப்பாற்பட்ட சேவை
Mercantile Investments and Finance PLC
இல. ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

## இயற்கை நடைபயணம்

யாழ்ப்பாணம், பெப். 1

சர்வதேச ஈரநில தினம் நாளை கடைப்பிடிக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு எதிர்காலத்துக்கான சுற்றுச்சூழல் கழகமும், சிறகுகள் அமையமும் இணைந்து இயற்கை மற்றும் வனவிலங்கு ஆர்வலர் ம.சசிகரன் தலைமையில் பாடசாலை மாணவருக்கான களப்பயணம் நடைபெற்றது. மாணவருக்கு ஈரநிலங்களின் முக்கியத்துவம், ஈரநிலங்கள் பாதுகாக்கப்படலில் ஒவ்வொரு தனி மனிதனதும் பங்களிப்பு என்பனவும் எடுத்துக் கூறப்பட்டன. ஈரநிலத்துக்கான இயற்கை நடைபயணத்தில் மாணவர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-27,20)

## பெருந்திருவிழா

ஊரெழு, பெப். 1

ஊரெழு ஸ்ரீ மீனாட்சி அம்மன் சோபகிருது வருட மஹோற்சவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 13 தினங்கள் ஆலய மஹோற்சவம் இடம் பெறவுள்ளது. பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி புதன் கிழமை மாலை சப்பரம், 8 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு தேர், 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு தீர்த்தோற்சவம் என்பன இடம் பெறுமென ஆலயத் தர்மகர்த்தாக்கள் தெரிவித்துள்ளனர். (ப-66)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 1

நாவலர் கலாசார மண்டபத்தில் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் ஆன்மீக பிரசாரகர்களுக்கான "ஓவியங்கள் ஊடாக இந்து சமய தத்துவங்களும் பெருமைகளும்" எனும் தொனிப்பொருளில் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப)

## நூல் வெளிய

யாழ்ப்பாணம், பெப். 1

நாவலர் கலாசார மண்டபத்தில் "தெய்[illegible]க்குத் துணை பாப்பா" என்ற மகாகவி ப[illegible]ரின் வாழ்க்கைக் குறிப்பு நூல் நாளை வெள்ளிக்கிழமை பி.ப.4 மணிக்கு வெளியிடப்படவுள்ளது. பிரதம அதிதியாக ஆறு.திருமுருகன் கலந்துகொள்ளவுள்ளார். (ப)

## பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர் கசிப்புடன் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், பெப். 1

நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்[illegible] நபர் மூளாய்ப் பகுதியில் கசிப்புடன் நேற்றுமு[illegible]னம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றின் வழக்[illegible]ளுக்குச் செல்லாது தலைமறைவாகியிருந்[illegible]லையில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவரே [illegible]ாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிரு[illegible] 50 மில்லிலீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது. [illegible]திக நடவடிக்கைகளுக்காக அவர் நீதிமன்ற[illegible]முற்படுத்தப்பட்டுள்ளார். (ம[illegible])

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். தோற்றப் பொலிவுகூடும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். புது நட்பு மலரும். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். தடைகள் உடைபடும் நாள்.

**இடபம்:** ஒருவித படபடப்பு வந்து செல்லும். குடும்பத்தில் சின்ன சின்னப் பிரச்சினைகள் அதிகமாகும். நீங்கள் எதை பேசினாலும் அதை எல்லோரும் தவறாக புரிந்து கொள்வார்கள். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**மிதுனம்:** வீண் விவாதம் வந்து செல்லும். ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். மனஸ்தாபங்கள் ஏற்படும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள். வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். நண்பர்களால் ஆதாயம் பெருகும். மற்றவர்களுக்காக செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள். நிர்வாகத் திறமை வெளிப்படும்.

**சிம்மம்:** குடும்பத்தில் பிரச்சினைகள் நீங்கும். பழைய கடன் பிரச்சினை கட்டுப்பாட்டுக்குள் வரும். முயற்சிகள் பலிதமாகும் நாள். வியாபாரம் சூடுபிடிக்கும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். தைரியம் கூடும்.

**கன்னி:** புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் அங்கீகாரம் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**துலாம்:** முகப்பொலிவு கூடும். வர வேண்டிய பணம் கைக்கு வரும். புதியவர்கள் நண்பர்கள் ஆவார்கள். பழைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**விருச்சிகம்:** உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். ஆதரவுப் பெருகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள்.

**தனுசு:** சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்களால் ஆதாயமுண்டு. எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். அமோகமான நாள். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**மகரம்:** குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற் கொள்வீர்கள். அக்கம்பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை அதிகரிக்கும். நட்பு வட்டம் விரியும். செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள்.

**கும்பம்:** தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். புது வேலை கிடைக்கும். நீண்ட நாள்களாக தள்ளிப் போன காரியம் இன்று முடியும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**மீனம்:** குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கு வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காப்பீர்கள். தைரியம் கூடும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் "கோ ஹோம்" 10 பேர் நேற்றுக் கைது

கொழும்பு, பெப்.1

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவைக் கைது செய்யுமாறு வலியுறுத்தி குற்றப் புலனாய்வுத் திணைக்களம் முன்பாக உருவாக்கப்பட்ட 'கெஹலிய கோ கம' கலைக்கப்பட்டுள்ளதுடன், போராட்டத்தில் ஈடுபட்ட 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கெஹலிய ரம்புக்வெல சுகாதார அமைச்சராக இருந்தபோது மருந்துக் கொள்வனவில் இடம்பெற்றது என்று கூறப்படும் மோசடி தொடர்பில் அவர் உட்பட பொறுப்புக்கூறவேண்டிய அதிகாரிகள் கைது செய்யப்படவேண்டும் எனவும், அதுவரை சத்தியாக்கிரகம் தொடரும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

ஊழல், மோசடி மற்றும் இலஞ்சத்துக்கு எதிரான மக்கள் இயக்கத்தால் இதற்கான ஏற்பாடு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்பாக செய்யப்பட்டிருந்தது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கலைந்து செல்லுமாறு பொலிஸார் அறிவுறுத்தினர். இதனால் பொலிஸாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. அதையடுத்து 8 ஆண்களும், இரு பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-44)

# ஐ.ம.சக்தியில் ரத்நாயக்க கடும் சீற்றத்தில் பொன்சேகா

கொழும்பு, பெப்.1

முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்னாயக்கவை ஐக்கிய மக்கள் சக்தியில் இணைத்துக் கொண்டமைக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார் அந்தக் கட்சியின் தவிசாளரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.

கட்சி இதேவழியில் பயணித்தால் நாளை கோத்தாபய ராஜபக்சவும் கட்சிக்குள் வந்துவிடுவார் எனவும் கொழும்பில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியைக் கடுமையாக விமர்சித்துள்ளார் சரத் பொன்சேகா.

ஐக்கிய மக்கள் சக்தி என்பது தனி நபரின் சொத்து அல்ல. அதை உருவாக்குவதற்கு நாமும் பாடுபட்டுள்ளோம். கட்சியை அழிப்பதற்கு இடமளிக்கமுடியாது. நானும், தயா ரத்னாயக்கவும் ஒரே இடத்தில் இருக்கமுடியாது. அவர் வெட்கம்கெட்ட நிலையிலேயே இங்கு வந்துள்ளார். கட்சியின் முடிவு கவலையளிக்கின்றது. கடும் அதிருப்தியிலேயே இருக்கின்றேன்.



கட்சியை விட்டுச் செல்லும் எண்ணம் இல்லை. வாக்களித்த மக்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் கட்சியில் இருப்பேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-44)



சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் கலைவிழா அண்மையில் சாவகச்சேரி டச்சு வீதி, ஐங்கரன் மணி மண்டபத்தில் நடைபெற்றது. (ய-9)



வடமாகாண அமலமரித் தியாகிகள் சபையின் அனுசரணையுடன் மாற்றம் அறக்கட்டளை அமைப்பின் ஏற்பாட்டில் "வளமுற்று மகிழ்வோடு வாழ நேர் நோக்கில் புதிய சமூகம் படைக்க சேர்ந்து சிந்திப்போம் செயற்படு வோம்" என்ற வலைப்பினனல் உருவாக்க கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. (ப-159)

## மரண அறிவித்தல்

தோற்றம்
05 . 07 . 1937



மறைவு
31 . 01 . 2024

### வேலுப்பிள்ளை இராசா

(ஓய்வு பெற்ற ப.நோ.கூ.ச. முகாமையாளர்)

மயிலிட்டி யப்பையைப் பிறப்பிடமாகவும், கொயிலாமனை கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இராசா அவர்கள் நேற்று (31.01.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை நாகம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், கிளி, காலஞ்சென்ற பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரஜனி, சிறி, ரதி, பாபு, வவா ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகேஸ், கலா, ராசன், லோஜி, பவானி ஆகியோரின் மாமனாரும், நளினி, சோபிகா, விதுஷன், சிந்துஜா, கஜேந்திரன், கானுஜா, கஜந்தன், அபிசனா, குட்டி, துஷாந்தன், விஜய் ஆகியோரின் அன்புப் பேரனும் பிரகாஷ், அபிநயா ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.02.2024) வியாழக்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொயிலாமனை கட்டைபறிச்சான் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 833 2759

(CS 29339) S-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
11 . 09 . 1947



மறைவு
29 . 01 . 2024

### இலங்கைநாதன் இராசமலர்

(கிளியக்கா)

மலேசியாவை பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இலங்கைநாதன் இராசமலர் 29.01.2024 (திங்கட்கிழமை) காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை நாகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பரமநாதன் பொன்னம்மா தம்பதியினரின் மருமகளும், இலங்கைநாதனின் அன்பு மனைவியும், ஜெயப்பிரியா, ஜெயமோகன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத்தாயாரும், தயானந்தன் (ஜெயப்பிரியா நகைமாடம் யாழ்ப்பாணம்), சுகந்தி (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான காசிநாதன், சரஸ்வதி, சொக்கநாதன், இராசசிரோன்மணி, நடராசா ஆகியோரின் அன்பு சகோதரியும், சண்முகநாதன், காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன், மகாலக்சுமி ஆகியோரின் மைத்துனியும், கமலேஷ், துவாரகன், கேதாரா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.02.2024 (வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 194 9960

(CS 29338) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டரீதியற்ற...

கடந்த 27ஆம் திகதி திருகோணமலையில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி. சிறீதரனுக்கு எழுதிய கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

தமிழ் மக்களின் முதன்மைக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வாக்கெடுப்பில் கலந்துகொண்ட பொதுச்சபை உறுப்பினர்கள் நியமிக்கப்பட்ட முறைகள், யாப்புக்கு முரணாகப் பலர் சேர்த்துக்கொள்ளப்பட்டமை சம்பந்தமாகப் பல நியாயமான கருத்துகள் வெளிப்பட்டாலும், போட்டியாளன் என்ற வகையிலே அந்த முடிவை நான் முழுமையாக, பகிரங்கமாக ஏற்றிருக்கின்றேன்.

மத்தியகுழுக் கூட்டத்தின் ஆரம்பத்தில் இரு அணிகளாக உள்ள கட்சி ஒன்றித்துப் பயணிக்கவேண்டும் என்று நீங்கள் என்னிடம் கூறியபோது, தாங்கள் தலைவராகவும், நான் பொதுச் செயலாளராகவும் இருந்தால் மாத்திரமே அது சாத்தியமாகும் என்று குறிப்பிட்டேன்.

அவ்வாறு நாம் இயங்குவதில் தங்களுக்கு பூரண இணக்கம் உள்ளது என்பதைக் கூறிய நீங்கள், கிழக்கு மாகாணத்துக்குப் பொதுச்செயலாளர் பதவி கொடுக்கப்படவேண்டும் என்கின்ற எதிர்பார்ப்பை எப்படிப் பூர்த்தி செய்வது என்று வினவியிருந்தீர்கள். அதைக் கூட்டத்தின்போது மற்றவர்களோடு பேசித் தீர்ப்போம் என்று நான் கூறிய பின்னரே கூட்டம் ஆரம்பமானது.

கூட்டத்தின் ஆரம்பத்தில் சிரேஷ்ட உப தலைவர் பதவியைக் கொடுக்க தாங்கள் முன்வந்தபோது, அதை நிராகரித்தமைக்கான காரணம் மேற்சொன்ன எமது கலந்துரையாடலே. அதையே நான் கூட்டத்திலும் கூறியிருந்தேன். ஒரு பொது இணக்கப்பாட்டை எய்துவதற்கு இரண்டு இலக்குகள் அடையப்படவேண்டும் என்று நான் அவற்றை அடையாளப்படுத்தினேன். ஒன்று தலைவர் தெரிவில் பிரிந்து காணப்படும் இரு அணிகளும் ஒன்று சேர்வது. மற்றையது பொதுச் செயலாளர் பதவி கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்கப்படுவது.

இந்த யோசனையை ஏற்றுக்கொண்ட தாங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், ஞா.ஸ்ரீநேசன் ஆகியோரோடு உரையாடிவிட்டு திருகோணமலை மாவட்டக் கிளைத்

தலைவர் சண்முகம் குகதாசனை 'மட்டக்களப்பின் சம்மதத்தோடு' பொதுச்செயலாளர் பதவிக்குத் தெரிவு செய்வதாக அறிவித்தீர்கள். இதை மத்திய செயற்குழு எவ்வித ஆட்சேபனையுமின்றி ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

பொதுச்சபை கூடியபோது மத்திய செயற்குழுவின் பிரேரணையை பொதுச்சபையில் முன்வைத்தீர்கள். பல வாதப்பிரதிவாதங்கள், சண்டைகள் நிகழ்ந்தாலும் கூட, நீங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி மத்திய செயற்குழுவின் யோசனையை தங்களது முன்மொழிவாக பிரேரித்தீர்கள். அதைப் பீட்டர் இளஞ்செழியன் வழிமொழிந்தார். மாற்று முன்மொழிவு எதுவும் இல்லாத நிலையில் பொதுச்சபை இதை ஏற்றுக்கொண்டது.

மதிய உணவுக்காகக் கூட்டம் கலைந்தபோது, திரும்பவும் கூட வேண்டிய தேவை இல்லை என்று பலர் சொன்னபோது, முன்னாள் தலைவர் மாநாட்டு தீர்மானங்கள் சம்பந்தமாகப் பேசவேண்டும் என்று கூறியதன் காரணத்தால்தான் மதிய உணவுக்குப் பின்னர் மீண்டும் கூட நேர்ந்தது.

பொதுச்சபை மீண்டும் கூடியபோது, தங்களால் முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட்டு, சபை முன்னர் ஏற்ற தீர்மானத்தை இப்போது தமது நிலைப்பாட்டை மாற்றி அதனை நிராகரிப்பதாக ஒரு சிலர் குழப்பம் விளைவித்தனர். வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்றும் தொடர்ச்சியாகக் கேட்டுக்கொண்டிருந்தனர். அந்த வாக்கெடுப்பைச் செயலாளர் ஸ்தானத்திலிருந்து நடத்துமாறு தாங்களும் என்னைக் கேட்டுக்கொண்டீர்கள். அப்படி வாக்கெடுப்பை நடத்த என்னைப் பணிப்பதாக முன்னாள் தலைவரும் ஒலிபெருக்கி மூலமாக அறிவித்தார்.

வாக்களிப்பை நடத்திவிட்டு நான் வந்து அமர்ந்தபோது அதன் முடிவை அறிவிக்குமாறு நீங்கள் கேட்டுக்கொண்டதற்கமைய மீளவும் நான் ஒலிபெருக்கியிடம் சென்று, முடிவை அறிவித்தேன். அது பதிவு செய்யப்பட்டது. அடுத்த நாள் மாநாட்டுக்காகக் கூடுவோம் என்று அறிவித்ததோடு கூட்டம் உத்தியோகபூர்வமாகக் கலைக்கப்பட்டது.

வாக்கெடுப்பில் கலந்துகொண்ட பிறகு அதில் தோற்ற காரணத்தால் வாக்கெடுப்பு முறை தவறென்று சொல்லுவது முறைகேடான செயலென்பதற்கப்பால் சட்டத்தின் அடிப்படையிலும் அது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒரு நிலைப்பாடு.

எமது கட்சி யாப்பு விதிகளுக்கு அமைவாகவும், சட்டப்படியும் தாங்களே இப்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர். கடந்த 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெறவிருந்த பொதுநிகழ்வு தவறான ஆலோசனைகளின் பேரிலும், கலந்துரையாடல் இன்றியும், அதிகாரமற்றதும் சட்டத்துக்கு முரணான அறிவிப்பாலும் துரதிர்ஷ்டவசமாகப் பிற்போடப்பட்டுவிட்டது.

தங்களது தலைமையுரையில் எமது மக்களுக்கான விடிவுப் பாதை எப்படியானது என்ற தங்களது யோசனைகளை செவிமடுக்கப் பலரும் காத்திருந்தார்கள். எமது மக்கள் மத்தியில் எழுந்திருக்கும் பல்வேறு சந்தேகங்களுக்கும் விமர்சனங்களுக்கும் அது முற்றுப்புள்ளி வைத்திருக்கும். தயவு செய்து காலம் தாழ்த்தாது வெகு விரைவில் அந்தப் பகிரங்கப் பொது நிகழ்வை நடத்தவேண்டும் என்று அன்புரிமையோடு நான் கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (அ-எ-125-26)

## இலங்கையின்...

வேண்டும் என்றும் மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் சுதந்திரத்துக்கு முன்னர் இருந்தே தமிழர் தேசம் மீதான ஆக்கிரமிப்புகள் ஆரம்பமாகியிருந்தன. இந்த இனவழிப்புச் செயன்முறை 2009ஆம் ஆண்டு ஈழப்போர் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழர் தாயகத்தைச் சூறையாடுவதில் தீவிரநிலை கொண்டுள்ளது.

இந்தப் பின்னணியில் இலங்கையின் சுதந்திரதினத்தை கறுப்பு நாளாகப் பிரகடனப்படுத்தி, பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து பேரணி ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம்.

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதோடு, தமிழர் தாயகத்தின் மீதான திட்டமிட்ட சிங்கள - பௌத்த குடியேற்றங்கள் உள்ளிட்ட ஆக்கிரமிப்புகள் உடனடியாக நிறுத்தப்பட்டு தமிழர் தாயகத்தின் நில ஒருமைப்பாடு பாதுகாக்கப்படவேண்டும்.

ஈழத்தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆள்வதற்கும் வழிநடத்துவதற்கும் சுயநிர்ணய உரிமை உடையவர்களாவர் என்பதை ஏற்று ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பான முயற்சிகள் யாவும் திம்புக் கோட்பாட்டை அடியொற்றியே முன்னெடுக்கப்பட வேண்டும். சிறிலங்கா ஒற்றையாட்சி அரசமைப்புக்குட்பட்ட 13ஆம் திருத்தத்தை முற்றாக நிராகரிக்கின்றோம்.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், இராணுவப் பிரசன்னம், சிங்கள - பௌத்தமயமாக்கல், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை போன்றவற்றுக்கான தீர்வுகள் தாமதமேதுமின்றி வழங்கப்பட வேண்டும் - என்றுள்ளது. (அ-எ-125)

## உயிரைப்...

தனேசன் நிசாந் (வயது-29) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார். இவர் இரண்டரை மாதக் குழந்தையின் தந்தையாவார்.

நேற்றுமுன்தினம் இரவு நித்திரைக்குச் சென்ற இவர், நேற்று அதிகாலை உணர்வற்ற நிலையில் காணப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அவரைக் கொண்டு சென்றபோது, அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் அறிக்கையிட்டனர்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் இளைஞரின் உயிரிழப்புக்கு அதிக போதைப்பொருள் பாவனையே காரணம் என்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது. ஹெரோய்ன் மற்றும் மது பாவித்திருந்தமையும் கண்டறியப்பட்டுள்ளது.

உயிரிழந்த இளைஞர் 3 மாதச் சிறைத் தண்டனை அனுபவித்துக் கடந்த 28ஆம் திகதியே விடுவிக்கப்பட்டிருந்தார் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார்.

(அ-எ-26-125-20)

## எரிபொருள்...

371 ரூபாவாகும். ஒக்ரேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 8 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 456 ரூபாவாகும்.

ஓட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 363 ரூபாவாகும். சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 7 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 468 ரூபாவாகும்.

மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 26 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 262 ரூபாவாகும்.

இதேவேளை - லங்கா ஐ.ஓ.சி. நிறுவனமும் எரிபொருளின் விலையை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-எ)

## விபத்தில்...

கிளிநொச்சி, ஊற்றுப்புலத்தைச் சேர்ந்த மகதீஸ் அபிசாகன் (வயது-20) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த 26ஆம் திகதி விபத்துக்குள்ளாகியிருந்தார். தலைக்கவசம் இன்றி மோட்டார்சைக்கிளைச் செலுத்திய இவர் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத் தூண் ஒன்றுடன் மோதிப் படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த இவர் நேற்றுக் காலை உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## குமுதினி...

நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையே சேவையில் ஈடுபடும் குமுதினிப் படகு, கடந்த 26ஆம் திகதி பழுதடைந்தது. அதன்பின்னர் அதன் சேவைகள் நிறுத்தப்பட்டிருந்த நிலையில், தற்போது திருத்தவேலைகள் 75 ஆயிரம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இன்றுமுதல் குமுதினிப் படகுச் சேவை வழமைபோன்று நடைபெறும் என்று வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் தெரிவித்தார். (அ-எ-125)

## சுகாதாரத்...

போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்தக் கோரிக்கையை முன்வைத்து முன்னர் சுகாதாரத்துறையினர் போராட்டம் நடத்தியிருந்தனர். இது தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடச் சந்தர்ப்பம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்து, போராட்டம் தற்காலிகமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. ஆயினும் இதுவரை அவ்வாறான கலந்துரையாடலுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படாதநிலையில், இன்று மீண்டும் நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. (அ-எ-இ)

## கடவுச்சீட்டு...

உயர்த்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்டண உயர்வு இணையம் மற்றும் இணையம் அல்லாத சேவைகளுக்கு செல்லுபடியாகும் என்றும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## போதை...

பட்டுள்ளன என்றும், சந்தேகநபர் விற்பனை நோக்கத்துடன் போதை மாத்திரைகளை உடைமையில் வைத்திருந்தமை விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி தலைமைப் பொலிஸ் பரிசோதகர் பிறேமதிலக தலைமையிலான பொலிஸ் குழுவே சந்தேகநபரைக் கைது செய்துள்ளது.

சந்தேகநபர் யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்தவர் என்றும், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26)

## சுதந்திரதின...

என்ற கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சு, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு என்பன தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. புலனாய்வு அமைப்புகளும் இது தொடர்பில் செயற்படுகின்றன. பாதுகாப்புத் தொடர்பில் எவ்வித பிரச்சினையும் ஏற்படாது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரணி மீது தாக்குதல்; ஐக்கிய மக்கள் சக்தி வழக்கு

கொழும்பு, பெப்.1

நீதிமன்றத்தின் உத்தரவைக் கருத்தில் கொள்ளாமல் ஐ.ம.சக்தியின் பேரணி மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பதில் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு எதிராக அடிப்படை உரிமைமீறல் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

ஆயிரக்கணக்கான மக்கள் கொழும்பில் அணிதிரண்டு அரசுக்கு தமது எதிர்ப்பை வெளியிட்டனர். மக்கள் அலைக்கு அஞ்சி, ரணில் விக்கிரமசிங்க பொலிஸாரை ஏவிவிட்டு அறவழிப் போராட்டம் மீது தாக்குதல் நடத்தினார். ஐவர் மருத்துவமனையில் உள்ளனர்.

எமது பேரணிக்கு எதிராக குருந்துவத்த பொலிஸார் நீதிமன்றம் சென்றபோது எதிர்ப்புத் தெரிவிக்க, பேரணி நடத்த, கருத்து வெளியிட அரசமைப்பின் பிரகாரம் அனுமதி உள்ளது எனச் சுட்டிக்காட்டி, தடை உத்தரவை வழங்க நீதிமன்றம் மறுத்திருந்தது. இந்தநிலையிலேயே குருந்துவத்த பொலிஸ் அதிகாரப் பிரிவில் வைத்து எம்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது சட்டவிரோத நடவடிக்கையாகும் - என்றார். (எ-44)

## தும்பளை புனித லூர்து அன்னையின் யாத்திரைத் திருத்தல விழா ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.1

பருத்தித்துறை, தும்பளை புனித லூர்து அன்னையின் யாத்திரைத் திருத்தல திருவிழா நாளை 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை பருத்தித்துறை பங்குத் தந்தையும் மறைக்கோட்ட முதல்வரும் திருத்தல பரிபாலகருமாகிய அருட்பணி ஏ.எவ். பெனற் அடிகளின் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தினமும்மாலை4.30மணிக்கு திருச்செபமாலையுடன் நவநாள் வழிபாடுகள் நடைபெறும். 10ஆம் திகதி சனிக்கிழமை வழிபாட்டில் திவ்விய நற்கருணை விழாத் திருப்பலியும், ஆராதனையும், பவனியும் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணியாளர் பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் இடம்பெறும்.

11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிக்கும், 7 மணிக்கும் திருவிழாத் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும். 7 மணிக்கு நடைபெறும் திருவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்ட ஆயர் பேரட்திரு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமை தாங்கி ஒப்புக் கொடுப்பார்.

திருப்பலியின் நிறைவில் புனித லூர்து அன்னையின் திருச்சொரூபப் பவனியும் ஆசீரும் இடம்பெறும் என்று திருத்தல பரிபாலகர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## வடதாரகை திருத்தத்துக்கு 3.2 மில். கோரும் கடற்படை

யாழ்ப்பாணம், பெப்.1

வடதாரகை பயணிகள் படகுத் திருத்த வேலைக்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் 3.2 மில்லியன் ரூபா கோரியுள்ளது இலங்கைக் கடற்படை.

பழுதடைந்துள்ள வடதாரகைப் படகை கடற்படையினர் மூலம் திருத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், காங்கேசன்துறை கொண்டு செல்லப்பட்டு திருத்தப் பணிகள் நடைபெறவுள்ளன. தற்போது இனங்காணப்பட்டுள்ள பழுதைத் திருத்துவதற்கு 32 இலட்சம் ரூபா தேவை என்று கடற்படை கோரியுள்ளது. திருத்தப்பணிகள் முன்னெடுக்கப்படும் போது மேலும் பழுதுகள் இனங்காணப்பட்டால் இந்தச் செலவினம் அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது படகு திருத்தப்பட்டால் சுமார் 6 மாதங்கள்வரை சேவையில் ஈடுபடமுடியும் என்றும் கூறப்படுகின்றது.

கச்சதீவுப் பெருந்திருவிழா நடைபெறவுள்ள நிலையில், வடதாரகைப் படகுச் சேவை அவசியம் என்று அண்மையில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற முன்னாயத்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. படகுத் திருத்த வேலைகளைத் துரிதப்படுத்தவேண்டும் என்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதே நேரம், நெடுந்தீவுக்கான பயணிகள் படகுச் சேவையிலும் வடதாரகையின் பங்கு முக்கியமானது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ-125)

## அறிவோர் அரங்கு

யாழ்ப்பாணம், பெப்.1

'மினெ ஸ்டோவா' பல்கலைக்கழக இணை பேராசிரியர் வி.வி.கணேசானந்தன் பங்குபற்றும் அவரது ஆங்கில நாவல் (Brotherless Night) தொடர்பான உரையரங்கு இன்று மாலை 4 மணிக்கு தந்தை செல்வா கலை அரங்கில் நடைபெறவுள்ளது.

உலகப் புகழ் பெற்ற ஆங்கில இலக்கிய அறிஞரும், மேனாள் அமெரிக்கப் பல்கலைக்கழக ஆய்வறிஞரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கில இலக்கிய முது நிலை விரிவுரையாளருமான கலாநிதி மகேந்திரன் திருவரங்கன் மதிப்புரை நிலை நடுவராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

கலந்துரையாடல், ஐயம் தெளி அரங்கு ஆகியன இடம்பெறும். இலக்கிய ஆர்வலர், ஆங்கில இலக்கிய மாணவர்கள், ஆர்வமுடையோர் கலந்துகொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (எ-இ)

## ஹெரோய்ன் வைத்திருந்தோருக்கு தண்டம்

யாழ்ப்பாணம், பெப்.1

ஹெரோய்னைஉடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவருக்குத் தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது நீதிமன்றம்.

கடந்த 29ஆம் திகதி இளவாலைப் பொலிஸார் தலா 20 மில்லிகிராம் ஹெரோய்ன் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர்கள் இருவரைக் கைது செய்தனர். அவர்களைக் கடந்த 30ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்திய போது அவர்களை நீதிமன்றம் விளக்கமறியலில் வைத்தது.

இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சந்தேகநபர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். அவர்களைக் கடுமையாக எச்சரித்த நீதிமன்றம் தலா 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது. (எ-125)

## விளக்கமறியல்

கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞரை எதிர்வரும் 14 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

சந்தேகநபர் இளவாலைப் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். சந்தேகநபரிடம் இருந்து ஆயிரத்த 50 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது, அவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (எ-125)

**வீடு வாடகைக்கு தேவை**

யாழ் நகர், நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில் போன்ற பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.

T.P: 075 081 2995

**வாகனம் தேவை**

(Lite ace)

Lite ace.
பட்டா ரக வாகனம்
மாத வாடகைக்கு உடன் தேவை.

தொடர்பு: வியா பிறைவேற் LTD யாழ்ப்பாணம். 077 623 7956

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம்-கைதடி A-9 வீதி முகப்புடன் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு
- நல்ல சூழல் நன்னீரூற்று
- கைதடி சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரம்.
- வடமாகாண சபை 300மீற்றர்
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

077 129 4999
076 788 0591

**பணியாளர் தேவை**

வடக்கு மாகாணத்தில் பணியாற்றக்கூடிய கம்பனி ஒன்றிற்கு 25 - 50 வயதுக்குட்பட்ட வேலை அனுபவமுள்ள, ஆர்வமுள்ள இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
அடிப்படை சம்பளம் - 40,000/- உடன் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும்.
விண்ணப்ப இறுதித்திகதி: 05.02.2024 வரை

021 722 3186, 024 434 6557

**தனியார் வகுப்புகள்**

A/L மாணவர்களுக்கான இரசாயனவியல், பௌதிகவியல், உயிரியல் (ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி மூலம்) வீட்டில் வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு: 076 418 6839

O/L விஞ்ஞானம், கணிதம், ICT (English and Tamil Mediam)

தொடர்பு: 074 075 9308

**TECHNO WORLD**
A/L தொழில்நுட்பப் பிரிவு

செயன்முறை
வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகள்
- பொறியியல் தொழினுட்பம்
- உயிர்முறைமைகள் தொழினுட்பம்
- ஆரம்பம் - 04.02.2024
- நேரம் - காலை 9.00 am

நவீன ஆய்வுகூட வசதிகளுடன்
மற்றும் அனுபவம் மிக்க ஆசிரியர்குழாம்
இடம் - வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார்
அருகாமை, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 077 017 5346

(எ.41623) (N-1)

**பணியாளர் தேவை**
**திருமண மண்டபம்**

1. முகாமையாளர்- தகைமை A/L
முன் அனுபவம் விரும்பத்தக்கது
வயது : 28 - 40
2. துப்புரவுப் பணியாளர்- தகைமை O/L
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

(எ.29329) (N-1)

தொடர்பு: 077 573 7497
077 013 4851
021 221 2464

**காணி, வீடு, மூன்று கடைத்தொகுதி விற்பனைக்கு**

இல-17 மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்த 3 1/4 பரப்பு காணி, வீடு, 3 மூன்று கடைத்தொகுதி என்பவற்றுடன் 13 அறைகளுடன் உடனடியாக விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
077 993 4169, 077 071 1217



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.02. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org